MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only




To

BOOK POST

If Undeliveried please return to ...


Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852



# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.08.2026 to 21.08.2026 | Saturday to Friday | | Mission Appeal | United States |
| 22.08.2026 | Saturday | 8.30 am | Jubilee Celebration of Catholicos | Pattom |
| 23.08.2026 | Sunday | 7.00 am | Commemoration Mass Msgr. Joseph Kuzhinjalil | Cathedral Marthandam |
| 27.08.2026 | Thursday | 10.30 am | Marriage | Kannacode |
| 29.08.2026 | Saturday | 2.30 pm | MCMF - Gathering | Mariagiri |
| 30.08.2026 | Sunday | | Holy Mass | Pravithanam - Pala |
| 31.08.2026 | Monday | | Class on Pneumatology | St. Mary's Major Seminary Nalanchira |







# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23 ஆகஸ்ட் 2026 இதழ். 08


**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*





மலர். 23 ஜூலை 2026 இதழ். 07

**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam




மலர்.23 ஆகஸ்ட் 2026 இதழ்.08

## முக்கியமான நாட்கள்

ஆகஸ்ட் 2026

- 02 சர்வதேச நட்பு தினம்
- 09 உலக பழங்குடி மக்களின் சர்வதேச தினம்
- 12 சர்வதேச இளைஞர் தினம்
- 15 இந்திய சுதந்திர தினம்
- 19 உலக புகைப்பட தினம்
- 29 தேசிய விளையாட்டு தினம்
- 30 சிறு தொழில் தினம்

## உள்ளடக்கம்


1. Circular 03
2. குருமடச் செய்திகள் 12
3. அருள்முனைவர் யூஜின் அவர்களுக்கு வாழ்த்துகள் 13
4. மறைபரப்பு தளச் செய்திகள் 13
5. புனித ஜாண் மரிய வியானி குருக்கள் நலநிதியத்தின் பொதுக்குழு கூட்டம் 14
6. Bishop Feast Day Charity Fund 2026 15
7. ஆண்டுதிரட்டு சமர்ப்பித்து பஙகுப் பேரவை அனுமதி பெற்ற ஆலயங்களின் விபரம் 22
8. மேரி மக்கள் துறவற சபை 26
9. பெயர்விழா நல்வாழ்த்துகள் 28
10. திருமண ஆயத்தப்பயிற்சி 28
11. MIDS 29
12. MCYM 31
13. MCA 32
14. மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி 33
15. புனித வின்சென்ட் தே பவுல் சபை 34
16. கொமித்சியச் செய்திகள் 35
17. Health for One Million (Hom) 35
18. மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி, இலவுவிளை 36
19. மலங்கரை கத்தோலிக்க கல்லூரி, மரியாகிரி 37
20. மறைவட்ட செய்திகள் 38
21. ஆயரின் ஜூலை மாத நிகழ்வுகள் 44
18. இம்மாதம் நினைவு கூர 47
19. Bishop's Diary 48


*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



## மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி தினம் - 2026

*அன்பார்ந்த குருக்களே, துறவிகளே, கோர்-எப்பிஸ்கோப்பாமார்களே, ஆசிரியபெருமக்களே, பெற்றோர்களே, அன்பு மாணவச் செல்வங்களே,*

மூவொரு இறைவனின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபை திருவழிபாட்டு ஆண்டை சிறப்பித்து மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவிற்கு தன்னை தயார்படுத்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் திருச்சபையின் தலைவரும் தந்தையுமாகிய மோறோன் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் காதோலிக்கா பாவா மற்றும் ஆயர் மாமன்றத்தின் திருத்தூதுவ ஆசீர்வாதங்களுடன், திருவழிபாட்டுடன் இணைந்த பகுதியாக விளங்கும் மறைக்கல்விப் பணியின் முக்கியத்துவத்தை குருக்கள், துறவிகள், மறைக்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திருச்சபை நம் ஆண்டவரின் உயிருள்ள நற்செய்தியை வாழ்வாக்குவதன் மூலம் இந்த திருப்பணியை மேற்கொள்கிறது. “எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்று கூறினார்” (மத் 28:19-20). கடவுள் மனிதனுக்கு அளித்த திறன்களையும் நன்மைத்தனங்களையும் பயன்படுத்தி, கடவுளைக் கண்டடையவும், அவரை அறியவும், அவரை நேசிக்கவும், அவருக்குப் பணிவிடைபுரியவும், கிறிஸ்துவின் சீடர்களாக உருவாக்கம் பெறவும் அழைக்கப்படுகிறான். பகுத்தறிவும் நம்பிக்கையும்

இணைந்து செல்பவை. நம்பிக்கையில்லாத பகுத்தறிவு தற்பெருமைக்கும், வாழ்வின் நிறைவை இழந்த நிலைக்கும் இட்டுச் செல்லும். அதே வேளையில் பகுத்தறிவில்லாத நம்பிக்கை அறியாமைக்கும், பாதைமாறிய நிலைக்கும் இட்டுச் செல்லும். எனவே மறைக்கல்விக்கு அறிவு சார்ந்த கற்பித்தல் இன்றியமையாதது.

மறைக்கல்வி என்பது அறிவைப் பெறுவது மட்டுமல்ல. இயேசுவுக்காக நிற்பதும், அவருடைய திருச்சபையைக் கட்டியெழுப்புவதே ஆகும். மறைக்கல்வி திருச்சபையை அன்பு செய்யவும் கிறிஸ்துவை சார்ந்து நிலைப்பாடுகள் மேற்கொள்ளவும், வாழ்க்கை சூழல்களில் அறநெறி பண்பு சார்ந்த முடிவுகள் எடுத்து கிறிஸ்துவுக்கு சான்று பகிர்ந்து வாழவும் நம்பிக்கையாளர்களை தயார் செய்கிறது. திருவழிபாடு மூலம் நாம் பெறும் அருள்வளம் நம்மை ஆன்மீக நிலையில் வளரச் செய்கிறது. கிறிஸ்து சீடர்களாக மாறி திருச்சபையையும் சமூகத்தையும் வளம்பெறச் செய்ய அனைவருக்கும் இயல வேண்டும்.

## I. இறை வெளிப்பாடுகள் : திருச்சபையின் மறைக்கல்விப் பணியின் அடிப்படை

இறைவெளிப்பாடே நம்பிக்கையின் அடித்தளம். காலத்தின் நிறைவில் தந்தைக் கடவுள் தம்மை இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தினார். திருச்சபையில் தூய ஆவியார் இந்த இறைவெளிப்பாட்டின் திருப்பணியை தொடர்கிறார். இவையே நமது நம்பிக்கையின் உள்ளடக்கம். இறைவனையும் மனிதனையும் மீட்பையும் குறித்த இந்த இறைவெளிப்பாடு அதிகாரபூர்வமானது. திருவிவிலியத்திலும் திருஅவை தந்தையர்களின் படிப்பினைகளிலும் திருச்சபையின் ஆசிரியத்தாலும் இந்த இறைவெளிப்பாடு பாதுகாக்கப்படுகிறது. திருச்சபையின் போதனைப் பணியான மறைக்கல்வி இறைமக்களுக்கு அவர்களின் வயது மற்றும் வளர்ச்சிக்கேற்ப இந்த விசுவாச உண்மைகளை வழங்கி, அவர்களின் விசுவாச உருவாக்கத்திற்கும் திருவழிபாட்டு வாழ்விற்கும் அடித்தளத்தை அமைக்கிறது.



கடவுளின் மீட்புத்திட்டத்தின் இறைஏவுதல் பெற்ற சாட்சியமே திருவிவிலியம். "பலமுறை, பலவகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார், இவரை எல்லாவற்றுக்கும் உரிமையாளராக்கினார்; இவர் வழியாக உலகங்களைப் படைத்தார்" (எபி 1:1-2). இந்த இறைவெளிப்பாட்டின் முழுமை திருவிவிலியத்திலும் திருச்சபையின் படிப்பினைகளிலும் நமக்கு கிடைக்கிறது. நமது மறைக்கல்விப் பாடப்புத்தகங்கள் திருவிவிலியம், திருவழிபாடு, அருளடையாளங்கள், அருங்குறிகள், திருச்சபையின் கோட்பாடுகள், திருச்சபை வரலாறு மற்றும் அறநெறி வாழ்க்கை ஆகியவற்றை முறையாக முன்வைக்கின்றன. இத்தகைய மறைக்கல்விப் திருப்பணியில், குருக்கள், துறவிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தெளிவான அறிவோடும் அர்ப்பணிப்போடும் செயல்பட வேண்டும்.

வழியும், உண்மையும் வாழ்வுமாகிய இயேசு கிறிஸ்துவை அறிந்துகொண்டு இறைமக்களாக வாழ்ந்து சான்று பகிர தகுதிப்படுத்துவதே மறைக்கல்வியின் நோக்கமாகும். நாத்திகம், மூடநம்பிக்கை, அறநெறி விழுமியங்களின் சிதைவு மற்றும் பொருள்முதல்வாதம் போன்ற சவால்களுக்கு மத்தியில், விசுவாச உண்மைகள் புதிய தலைமுறையினருக்கு ஏற்கத்தக்க மற்றும் பயனுள்ள வழிகளில் எடுத்துரைக்கப்பட வேண்டும். இதற்காக, நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் கற்றல் முறைகளின் சாத்தியக்கூறுகள் விவேகத்துடன் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மறைமாவட்ட மறைக்கல்வி அலுவலகங்கள் செயலூக்குமான தலைமைத்துவத்தை வழங்க வேண்டும்.

விசுவாசத்தின் அடிப்படை உண்மைகள் குழந்தைகளின் இதயங்களில் நிலைத்திருப்பதை உறுதிசெய்ய சிறப்பு கவனம் தேவை. நமது விசுவாசத்தைப் பற்றிய கேள்விகளுக்கு அவர்களால் தெளிவான

பதில்களை அளிக்க இயல வேண்டும். இந்த நோக்கத்திற்காக, நம்பிக்கை போதனையின் முதல் பள்ளியாகிய இல்லத்தில், தினமும் திருமறை வாசித்தல், இறைவார்த்தையை ஆராய்தல், மனப்பாடம் செய்தல் மற்றும் குடும்ப ஜெபம் ஆகியவை ஊக்குவிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபத்திற்கு முன்பு இறைவார்த்தை வாசிக்கப்பட வேண்டும். மேலும், அதன் செய்தியை குடும்ப உறுப்பினர்கள் சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். திருச்சபை மீதான அன்பிலும் விசுவாச உணர்விலும் தலைமுறைகளை வளர்க்க, ஒவ்வொருவரும் இந்த பணியை கவனத்துடன் நிறைவேற்ற வேண்டும்.

## II. செயற்கை நுண்ணறிவு (AI) யுகத்தில் நம்பிக்கை பயிற்சியின் முக்கியத்துவம்

தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். செயற்கை நுண்ணறிவு (AI) நமது அன்றாட வாழ்வின் ஓர் அங்கமாகி வருவதுடன், கல்வி, சுகாதாரம், தகவல் தொடர்பு, பொருளாதாரம் மற்றும் சமய வாழ்க்கை உள்ளிட்ட வாழ்வின் அனைத்துத் துறைகள் தொடங்கி மனித சிந்தனை, கற்றல், முடிவெடுத்தல் மற்றும் தனிப்பட்ட உறவுகள் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்தச் சூழலில் திருச்சபை எதிர்கொள்ளும் முக்கியமான கேள்வி ஒன்று உள்ளது.

செயற்கை நுண்ணறிவு யுகத்தில் நம்பிக்கை சார்ந்த பயிற்சிகள் எவ்வாறு பொருத்தமானதாகத் தொடர முடியும்?

**• நம்பிக்கை பயிற்சி : மனித மாண்பைப் பாதுகாத்தல்**

செயற்கை நுண்ணறிவு குறித்த தனது போதனைகளில், திருத்தந்தை பதினான்காம் லியோ, மனிதனின் மாண்பை குறிப்பாக வலியுறுத்துகிறார். இயந்திரங்கள் மனித அறிவைப் பின்பற்ற முடியும். ஆனால் அவற்றிற்கு மனசாட்சி, இரக்கம் மற்றும் அறநெறிப் பொறுப்புணர்வு இல்லை. மனிதர்கள் கடவுளின் சாயலிலும் உருவிலும் படைக்கப்பட்டிருக்கிறார்கள் (தொநூ 1:27). விசுவாப் பயிற்சியானது, மனிதனிடம் இந்த தெய்வீக மகிமை பற்றிய உணர்வை வளர்த்துகிறது.



உண்மையான மதிப்பீடு சாதனைகளிலோ செயல் திறனிலோ இல்லை, மாறாக கடவுளின் அன்பில் தான் உள்ளது என்று உணரச் செய்ய வேண்டும்.

**• உண்மையைத் தேட வழிவகுக்கிறது**

இன்றைய குழந்தைகளும் இளைஞர்களும், துரிதமாக பதில்கள் கிடைக்கக்கூடிய ஒரு உலகில் வாழ்கிறார்கள். ஆனால், 'நான் யார்?', 'என் வாழ்வின் நோக்கம் என்ன?', 'உண்மை என்றால் என்ன?', 'படைப்பாளர் என்னிடமிருந்து என்ன விரும்புகிறார்?', 'மரணத்திற்குப் பின் என்ன நடக்கும்?' போன்ற அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க தொழில்நுட்பம் மட்டும் போதாது. நம்பிக்கைப் பயிற்சியானது, இளைய தலைமுறையினரை உடனடிப்பதில் மொழிகளுக்கும் மேலாக, ஆழமான உண்மைத் தேடலுக்கும் விவேகம் கலந்த சிந்தனைக்கும் இட்டுச் செல்ல வேண்டும்.

**• அறிவிலிருந்து இறை அனுபவத்திற்கு**

அறிவுள்ள கிறிஸ்தவர்களை உருவாக்குவது மட்டுமல்ல நம்பிக்கை பயிற்சியின் நோக்கம். அது கிறிஸ்து சீடர்களை உருவாக்குவதுமாகும். செயற்கை நுண்ணறிவு (AI) வாழ்க்கையை எளிதாக்கினாலும், அது நிலை வாழ்விற்கு மாற்றாகாது. ஜெபம், தியாகம், அருள், மனந்திரும்புதல் மற்றும் அன்பு ஆகியவை தூய வாழ்விற்கு இன்றியமையாதவை. புனித அகுஸ்தீனார் கூறியது போல, 'எங்கள் இதயங்கள் உம்மிடம் இளைப்பாறும் வரை அமைதியற்று இருக்கும்.' மனித இதயத்தின் இந்த தாகத்தை தொழில்நுட்பத்தால் தணிக்க முடியாது. எனவே, திருச்சபை நம்மை செயற்கை நுண்ணறிவை பயத்துடன் அல்ல, ஞானத்துடனும் திடனுடனும் எதிர்கொள்ள அழைக்கிறது. விசுவாசப் பயிற்சியானது இறைவார்த்தையில் வேரூன்றி, தார்மீக விழிப்புணர்வையும் ஆன்மீக முதிர்ச்சியையும் வளர்த்து, தொழில்நுட்பத்தை அறிவோடு மதிப்பிட நமக்கு உதவ வேண்டும். செயற்கை நுண்ணறிவு மனிதர்களுக்கு மாற்றாக அமைய முடியாது. ஆவிக்கும் அருளுக்கும் மாற்றாகவும் அமைய முடியாது. ஆகவே, தொழில்நுட்பத்தின் பயன்பாடு கிறிஸ்துவில்

வேரூன்றிய சீடர்களின் சமூகத்தை உருவாக்குவதற்கு உதவ வேண்டும். செயற்கை நுண்ணறிவு உலகை மாற்றிக்கொண்டிருந்தாலும், இயந்திரங்களால் மனித ஆன்மா, மனசாட்சி மற்றும் கடவுளின் அருளுக்கு மாற்றாக அமைய முடியாது. எனவே, இந்த செயற்கை நுண்ணறிவு யுகத்தில் நம்பிக்கை பயிற்சியின் முக்கியத்துவம் ஒருபோதும் குறைவதில்லை; மாறாக, அது அதிகமாக தேவைப்படுகிறது. உண்மையை அறிந்து, அன்பில் வாழ்ந்து, நம்பிக்கையில் நிலைத்திருந்து, கடவுளுடன் நடக்கும் மக்களை உருவாக்குவதே, இன்றும் என்றும் திருச்சபையின் பணியாகும்.

அன்புக்குரியவர்களே! ஆண்டவரைப் பெற்றுக் கொண்டு அவரது அன்பை கொடுத்துக் கொண்டும் பகிரும் திருப்பணியை நாம் மனப்பூர்வமாக அன்புடன் செய்ய வேண்டும். நமது குழந்தைகளில் விழுமியங்களை உருவாக்கம் செய்ய வேண்டும். இயேசுவின் அன்பு மற்றும் திருச்சபையின் அன்பு குறித்த உறுதியான நம்பிக்கைகளுக்கு நாம் முன்னுரிமை அளிக்க வேண்டும். அவர்கள் கிறிஸ்துவையும், திருச்சபையையும் நேசிப்பதைக் குறித்த உறுதிப்பாடுகளுக்கு வழிநடத்தப்பட வேண்டும். திருத்தூதர் புனித பவுலைப் போல, பேறுகால வேதனையுடன் பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் உருவாக்கம் செய்ய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இறையன்னையை போல இதோ உமது அடிமையென தம்மையே அர்ப்பணம் செய்து இப்பணியை ஏற்றுக்கொள்வோம். அனைவருக்கும் நன்றியையும் இறை வேண்டலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடவுள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

***அன்புடன்,***

14-07-2026 † **தோமாஸ் மார் கூரிலோஸ்**
காதோலிக்கேட் மையம் நம்பிக்கை பயிற்சி ஆயர் குழுவின் தலைவர்
பட்டம், திருவனந்தபுரம்



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist - 629 165

Cir. No. 5/2026 24.07.2026

CIRCULAR

***அன்புக்குரிய கோர் எப்பிஸ்கோப்பாக்களே, குருக்களே, துறவிகளே மற்றும் இறைமக்களே!***

நமது மறைமாவட்ட கல்வி வளர்ச்சிக்கு நீங்கள் அளித்து வரும் அனைத்து உதவிகளுக்கும் நன்றி.

நமது மறைமாவட்ட பள்ளிகளில் 131 ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் அரசு ஊதியம் பெற்று பணிபுரிந்து வருகிறார்கள். பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை வெகுவாக குறைந்துள்ளதால் 5 சதவீதம் விழுக்காடு ஆசிரியர்கள் உபரி என கல்வித்துறையால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சுயநிதி பிரிவு வகுப்புகளில் கல்வி கற்பிக்க 35 ஆசிரியர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்களுக்கு அரசு ஊதியம் கிடைப்பது மிகவும் கடினமாகவும் உள்ளது.

தற்போது நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் கல்வித்துறை அலுவலர்களிடம் இருந்து அவ்வப்போது வழங்கப்படும் ஆணைகளின் அடிப்படையில் மார்த்தாண்டம் மறைமாவட்ட மசிக பள்ளிகளின் நிர்வாகம் மற்றும் வளர்ச்சிப்பணி சார்ந்த சில வழிமுறைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

**1. ஆசிரியர் நியமனம் மற்றும் TET தேர்வு**

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி பட்டதாரி ஆசிரியர் மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பணி நியமனம் பெற ஆசிரியர் தகுதித்

தேர்வு (TET) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே நமது நிறுவனங்களில் 2026-2027-ம் கல்வி ஆண்டில் நியமனங்கள் அரசாங்க வழிகாட்டுதலின்படி மட்டுமே மேற்கொள்ளப்படும். ஆகவே அனைத்து ஆசிரியர்களும் ஆசிரியர் தகுதித்தேர்வு (TET) தேர்ச்சி பெற வேண்டியது அவசியமாகும்.

**2. பணிநாடுநர் முன்னுரிமை பட்டியல்**

மறைமாவட்ட கல்வி அலுவலகத்தில் பெயர் பதிவு செய்தவர்களின் முன்னுரிமை பட்டியல் பஉப தேர்ச்சி அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

**3. புதுப்பித்தல்**

பதிவேட்டில் பதிவு செய்துள்ள பணிநாடுநர்கள் தங்கள் பதிவுகளை பஉப தேர்ச்சி சான்றிதழுடன் புதுப்பித்து கொள்ள வேண்டியதாகும். மேலும் ஒவ்வொரு வருடமும் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் தங்கள் பதிவு எண்ணை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் புதுப்பிக்காவிடில் அவர்களது பெயர்கள் முன்னுரிமைப் பட்டியலிருந்து எவ்வித முன்னறிவிப்புமின்றி நீக்கம் செய்யப்படும். நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பதிவு செய்ய விரும்பினால் புதிதாக மட்டுமே பெயர்கள் பதிவு செய்யப்படும்.

**4. தல மேலாளர்கள்**

மசிக பள்ளிகளின் பொது மேலாளர் (மேனேஜர்) மறைமாவட்ட ஆயர் ஆவார். பள்ளிக்கூடங்கள் அமைந்துள்ள பங்குகளில் பணிபுரியும் பங்குத்தந்தை அதன் தலமேலாளராக (தலநிர்வாகி - பழைய பெயர்) ஆயரால் நியமிக்கப்படுகிறார். இவர்கள் மசிக பள்ளிகளின் தாளாளருக்கு பள்ளிகள் சார்ந்த கட்டமைப்பு மற்றும் இதர விடயங்களில் ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் வழங்குவார்கள்.



**5. ஊதியமில்லா ஆசிரியர்கள்**

வருடா வருடம் நமது பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது. அரசு ஒப்புதல் இல்லாத இடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் பணி நியமனம் பெறுவது மிகவும் கடினமாகும். ஆகவே அவர்கள் மாற்றுப் பணிகளை கண்டடைவது அவசியமாகிறது.

**6. பள்ளிகளில் மாணவர் சேர்க்கை**

ஊதியம் பெறும் ஆசிரியர்கள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோர்களோடு உரையாடி மாணவர்களை நமது பள்ளிகளில் தொடர்ந்து படிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஊதியம் பெறும் ஆசிரியர்கள் பொதுநலத்துடன் கூட்டு முயற்சிகள் மேற்கொண்டு மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

கல்விப்பணியாம் இறைப்பணியை திறம்படச் செய்திட அனைத்து ஆசிரியர் மற்றும் பணியாளர்களை இறைவன் ஊக்கப்படுத்துவாராக! ஆசி வழங்குவாராக!

*அன்புடன்,*

† **மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
பொது மேலாளர் - மசிக பள்ளிகள்
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# குருமடச் செய்திகள்

### ❖ கல்வியாண்டுத் தொடக்க விழா

05.07.2026 அன்று குருமடத்தில் கல்வியாண்டுத் தொடக்க விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்க் கவிஞரும் தமிழ் அறிஞருமான திரு. கிருஷ்ண குமார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொடர்ந்து அருட்சகோதரர்களால் நடனம், மைம் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டு விழா சிறப்பாக நிறைவுபெற்றது.

### ❖ புதிய ஆன்மீகத் தந்தைக்கு வரவேற்பு

13.07.2026 அன்று எங்கள் குருமடத்தின் புதிய ஆன்மீகத் தந்தையாக பொறுப்பேற்ற அருள்தந்தை அலெக்ஸ் குமார் அவர்களுக்கு குருமடக் குடும்பத்தினர் சார்பாக அன்பும் மகிழ்ச்சியும் கலந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

### ❖ மார் இவானியோஸ் நினைவு பாதயாத்திரை

13.07.2026 அன்று வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் அவர்களின் 73-ஆவது நினைவு நாளையொட்டி, மார்த்தாண்டம் பேராலயத்திலிருந்து திருவனந்தபுரம் பட்டம் புனித மரியன்னை பேராலயம் வரை நடைபெற்ற பாதயாத்திரையில் குருமடத்தின் அருட்சகோதரர்கள் பக்தியுடனும் ஆர்வத்துடனும் பங்கேற்றார்கள்.

### ❖ மார் இவானியோஸ் நினைவு திருப்பலி

15.07.2026 அன்று வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் 73-ஆவது நினைவுத்திருநாளை முன்னிட்டு, திருவனந்தபுரம் பட்டம் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் அருட்சகோதரர்கள் பக்தியுடனும் இறை நம்பிக்கையுடனும் பங்கேற்றனர். இந்நிகழ்வு வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் ஆன்மீகப் பாரம்பரியத்தையும், திருச்சபைக்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க பணிகளையும் நினைவுகூரும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.



# அருள்முனைவர் யூஜின் அவர்களுக்கு வாழ்த்துகள்!

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பராகுவே நாட்டில் திருத்தந்தையின் தூதராக பணிகளுக்கான களப்பணியை தொடங்கி இந்த ஆண்டு நிறைவு செய்து, வருகின்ற ஆகஸ்ட் மாதம் ஈராக்கில் உள்ள திருத்தந்தையின் பிரதிநிதித்துவ அலுவலகத்தில் நுண்ஷியோவின் இரண்டாவது செயலராக புதிய பொறுப்பை ஏற்கவிருக்கும் அருட்தந்தை யூஜின் அவர்களை மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துகிறோம். இந்த உயரிய பொறுப்பில் இறைவனின் ஞானத்தாலும், தூய ஆவியின் வழிநடத்தலாலும், சிறப்பாகப் பணியாற்றி திருச்சபைக்கும் உலக மக்களுக்கும் சிறந்த சேவையை வழங்கிட இதயங்கனிந்த வாழ்த்துகளையும் செபங்களையும் உரித்தாக்கிக்கொள்வோம்.

# மறைபரப்பு தளச் செய்திகள்

- ❖ **மதுரை** மறைபரப்பு தளத்தின் அருட்தந்தையர்களின் கூடுகையானது 08.07.2026 அன்று திருச்சி புனித அன்னை தெரசா ஆலயத்தில் நடைபெற்றது. இதில் மறைபரப்பு தளத்தில் பணி செய்கின்ற அருட்தந்தையர்கள் கலந்து கொண்டு மறைபரப்பு தளங்களின் வளர்ச்சிக்காக பல திட்டங்களை கலந்து ஆலோசனை செய்தனர்.
- ❖ **மதுரை** மறைபரப்புத்தள ஆலயத்தில் அந்த மறைபரப்புத்தள பங்குத்தந்தை ஜோணி ஆல்பர்ட் அவர்களால் நற்செய்தி கூட்டம் நடத்தப்பட்டது.
- ❖ நல்லநாதபுரம், ஜேஜே நகர், நைஸ்நகர் ஆகிய மறைபரப்பு தளங்களில் இலவச பள்ளிக்கூட புத்தக பை ஏழை மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
- ❖ திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு பகுதியில் ஜே ஜே நகரில் மறைபரப்புதளம் உள்ளது. அங்கு புதிய ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் 22.07.2026 அன்று மறைமாவட்ட முதன்மைகுரு பேரருட்தந்தை ஜோஸ்பிறைட் அவர்களால் நாட்டப்பட்டது.

# புனித ஜாண் மரிய வியானி குருக்கள் நலநிதியத்தின் பொதுக்குழு கூட்டம்

❖ நமது மறைமாவட்டத்தின் புனித ஜாண் மரிய வியானி குருக்கள் நலநிதியத்தின் பொதுக்குழு கூட்டமானது 17.07.2026 வெள்ளிக்கிழமை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் ஆயர் இல்லத்தில் உள்ள சிறுமலர் அரங்கத்தில் வைத்து காலை 10:25 மணிக்கு துவங்கப்பட்டது. மேதகு ஆயர் அவர்கள் ஜெபம் செய்து துவங்கி வைக்க அருட்தந்தை ராபர்ட் அவர்கள் விவிலியம் வாசிக்க நிதிய தலைவர் பேரருட்தந்தை ஜான் குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்க, நிதிய செயலர் அருட்தந்தை ரெதீஷ் ரிச்சர்ட் செயலர் அறிக்கை வாசிக்க, நிதிய பொருளர் பேரருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் ஓராண்டு வரவு செலவு கணக்குகளை வாசித்தார்கள். பின்னர் ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் உரையாற்றினார். அதற்குப் பிறகு கலந்து கொண்ட அனைத்து அருட்தந்தையர்களும் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு நிதியத்தினுடைய சட்டத்தொகுப்பு திருத்தம் செய்யப்பட்டது. மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அவர்கள் நிறைவுரை வழங்கினார்கள். கலந்துகொண்ட அனைவருக்கும் நிதிய செயலர் அருட்தந்தை ரெதீஷ் ரிச்சர்ட் அவர்கள் நன்றி நவில மதிய உணவோடு குருக்கள் நல நிதிய கூடுகை நிறைவுற்றது.



# Bishop's Feast Day Charity Fund
## Diocese of Marthandam
## 2026

### 1. Kaliakkavilai District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Mariagiri | 10,000.00 |
| 2 | Nadaikkavu | 10,000.00 |
| 3 | Koickathoppu | 5,000.00 |
| 4 | Meenachal | 5,000.00 |
| 5 | Mecode | 5,000.00 |
| 6 | Mankad | 5,000.00 |
| 7 | Adichavilagam | 5,000.00 |
| 8 | Sooriacode | 5,000.00 |
| 9 | Chekkittuvilai | 1,000.00 |
| | **Total** | **51,000.00** |

### 2. Kollamcode District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Ambilikonam | 5,000.00 |
| 2 | Pallukuzhy | 2,000.00 |
| 3 | Pushpagiri | 5,000.00 |
| 4 | Fathimanagar | 5,000.00 |
| 5 | Pinkulam | 3,500.00 |
| 6 | Oorambuvilai | 2,000.00 |
| 7 | Kidarakuzhy | 3,000.00 |
| 8 | Palavilai | 5,000.00 |
| 9 | Kaduvakuzhy | 2,000.00 |
| 10 | Adaikkakuzhi | 2,000.00 |
| 11 | Kirathoor | 10,000.00 |
| 12 | Manjathoppu | 5,000.00 |
| 13 | Punnamoottukadai | 1,000.00 |
| | **Total** | **50,500.00** |

## 3. Kulasekharam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Charoor | 5,000.00 |
| 2 | Ganapathikal | 2,000.00 |
| 3 | Kulasekharam | 2,000.00 |
| 4 | Pechipparai | 2,000.00 |
| 5 | Mukkampala | 1,000.00 |
| 6 | Anakkarai | 5,000.00 |
| 7 | Muthalar | 3,000.00 |
| 8 | Mathar | 5,000.00 |
| 9 | Cherupalloor | 5,000.00 |
| 10 | Peruvazhikkadavu | 1,000.00 |
| 11 | Zero Point | 1,000.00 |
| 12 | Sivalogam | 2,000.00 |
| 13 | Surulode Shrine | 2,000.00 |
| | **Total** | **36,000.00** |

## 4. Panachamoodu District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Panachamoodu | 5,000.00 |
| 2 | Vettukuzhi | 2,000.00 |
| 3 | Puliyoorsala | 2,500.00 |
| 4 | Keezhmancode | 2,000.00 |
| 5 | Kanchiyode | 3,000.00 |
| 6 | Kulapparai | 2,000.00 |
| 7 | Vellachipparai | 2,500.00 |
| 8 | Karumanoor | 3,000.00 |
| 9 | George Nager (Mughavoor) | 5,000.00 |
| 10 | Thachoorkonam | 5,000.00 |
| 11 | Chempakatharisu | 500.00 |
| | **Total** | **32,500.00** |



## 5. Marthandam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Attoor | 5,000.00 |
| 2 | Mathoorkonam | 3,000.00 |
| 3 | Kuzhithurai | 5,000.00 |
| 4 | Marthandam | 50,000.00 |
| 5 | Kannacode | 3,000.00 |
| 6 | Unnamalakadai | 5,000.00 |
| 7 | Chitharal | 2,500.00 |
| 8 | Soosaipuram | 5,000.00 |
| 9 | Vimalapuram | 10,000.00 |
| 10 | Serottukonam | 2,000.00 |
| 11 | Konam | 5,000.00 |
| 12 | Valiyavilai | 3,000.00 |
| | **Total** | **98,500.00** |

## 6. Azhakiyamandapam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Vazhodu | 2,000.00 |
| 2 | Seynamvilai | 2,000.00 |
| 3 | Pilankala | 10,000.00 |
| 4 | Poonthoppu | 2,000.00 |
| 5 | Alwarcoil | 2,000.00 |
| 6 | Chellamkonam | 15,000.00 |
| 7 | Kattuvilai | 3,000.00 |
| 8 | Verkilambi | 5,000.00 |
| | **Total** | **41,000.00** |

## 7. Nagercoil District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Christuvilagam | 3,000.00 |
| 2 | Chettikulam | 1,000.00 |
| 3 | Aanapottai | 2,000.00 |
| 4 | Mathias Nager | 2,000.00 |
| 5 | Ganadasapuram | 3,000.00 |
| 6 | Navalkadu | 5,000.00 |
| 7 | Erachakulam | 2,000.00 |
| 8 | Parvathipuram | 2,000.00 |
| 9 | Thenikulam | 3,000.00 |
| 10 | Kanyakumari | 2,000.00 |
| 11 | James Town | 1,000.00 |
| 12 | Mantharamputur | 1,000.00 |
| 13 | Bhoothapandi | 500.00 |
| 14 | Mukkadal | 1500.00 |
| 15 | Aloor | 1,000.00 |
| 16 | Kumarapuram | 1,000.00 |
| | **Total** | **30,000.00** |

## 8. Mission

| No. | Missions | Amount |
|---|---|---|
| 1 | Devathanampatti | 5,000.00 |
| 2 | Nallanathapuram | 2,000.00 |
| 3 | J.J Nager, Kalakkadu | 2,000.00 |
| | **Total** | **9,000.00** |

## 9. Schools & Colleges

| No. | Schools & Colleges | Amount |
|---|---|---|
| 1 | MSC Schools | 1,71,750.00 |
| 2 | Little Flower School, Pushpagiri | 15,000.00 |
| 3 | St.Mary's, Mariagiri | 25,000.00 |
| 4 | St. Xaviers, Palavilai | 5,000.00 |
| 5 | Mar Ivanios, Kuzhithurai | 10,000.00 |
| 6 | Mar Gregorios, Kirathoor | 25,000.00 |
| 7 | Mary Mount, Annakarai | 5,000.00 |
| 8 | Christuraja, Marthandam | 15,000.00 |
| 9 | MCC | 1,00,000.00 |
| 10 | Mar Ephream Engineering College | 1,32,763.00 |
| 11 | Mar Chrysostom Bed College | 10,000.00 |
| | **Total** | **5,14,513.00** |



## 10. Pious Association

| No. | Pious Association | Amount |
|---|---|---|
| 1 | Vincent De Paul | 4,000.00 |
| 2 | Catechism | 2,000.00 |
| 3 | MCA | 10,000.00 |
| 4 | Legion of Mary | 1,000.00 |
| 5 | Mother's Forum | 5,000.00 |
| 6 | Pastoral Council | 15,000.00 |
| 7 | MCYM | 2,000.00 |
| | **Total** | **39,000.00** |

## 11. Institutions

| No. | Institutions | Amount |
|---|---|---|
| 1 | MIDS | 1,00,000.00 |
| 2 | HOM | 5,000.00 |
| 3 | MPDNL | 1,00,000.00 |
| | **Total** | **2,05,000.00** |

## 12. Individual

| No. | Individual | Amount |
|---|---|---|
| 1 | Mr. Sabu (Nadaikavu) | 1,000.00 |
| 2 | Rosammal, Maria Rasal (Chellamkonam) | 2,000.00 |

| | | |
|---|---|---|
| 3 | Mr. Justin K. (Kirathoor) | 1,000.00 |
| 4 | Mrs. Santha | 1,000.00 |
| 5 | Mr. Rajendra Babu (Mecode) | 5,000.00 |
| 6 | Mr. John Celestine | 1,000.00 |
| 7 | Mr. Sudharsan (Chundavilai) | 10,000.00 |
| 8 | Mr. Francis (Nadaikavu) | 2,000.00 |
| 9 | Mr. Francis Raj (Eng) | 5,000.00 |
| 10 | Kanakam Enus (Fathima Nager) | 3,000.00 |
| 11 | D.Paul Raj (Koickalthoppu) | 5,000.00 |
| 12 | Arch Joby (Thiruvalla) | 10,000.00 |
| 13 | Mr.Thankaraj (Melpalai) | 4,000.00 |
| 14 | Rajan, Vijayan | 50,000.00 |
| | **Total** | **100,000.00** |

## 13. Convents & Religious

| No. | Convents & Religious | Amount |
|---|---|---|
| 1 | DM Generalate | 15,000.00 |
| 2 | Bethany Navajeevan Province | 30,000.00 |
| 3 | DM, Nirmala Province, Veniyoor | 10,000.00 |
| | DM, Amala Province, Chanda | 10,000.00 |
| 4 | DM Provincial House, Marthandam | 50,000.00 |
| 5 | DM Convent, Kirathoor | 2,500.00 |
| 6 | DM Convent, Anakkarai | 2,000.00 |
| 7 | DM Convent, Mathar | 2,500.00 |
| 8 | DM Convent, Tara Hostel | 2,500.00 |
| 9 | DM Convent, Vimalapuram | 1,000.00 |
| 10 | DM Convent, Meenachal | 1,000.00 |
| 11 | DM Convent, Kumaracoil | 1,000.00 |
| 12 | DM Convent, Mariagiri | 1,000.00 |
| 13 | DM Convent, Chellamkonam | 3,000.00 |
| 14 | DM Convent, Kanchiyode | 5,000.00 |
| 15 | DM Convent, Pilankalai | 2,000.00 |
| 16 | DM Convent, Kaliyal | 1,000.00 |
| 17 | DM Convent, Panachamoodu | 5,000.00 |
| 18 | DM Convent, Stella Maris | 5,000.00 |
| 19 | DM Convent, Emmaus | 3,000.00 |
| 20 | DM Convent, Assisi Nilayam | 2,000.00 |
| 21 | DM Convent, Pushpagiri | 2,000.00 |
| 22 | DM Convent, Attoor | 1,000.00 |
| 23 | DM Convent, Veeravanalloor | 1,000.00 |
| 24 | DM Convent, Thadikarakonam | 1,000.00 |
| 25 | D.S.S Sisters | 1,500.00 |
| 26 | SJSM Sisters, Mecode | 3,000.00 |
| 27 | Sister of Charity | 10,000.00 |
| 28 | Holy Spirit Sisters | 5,000.00 |
| 29 | SIC Provincial House, Trivandrum | 25,000.00 |
| 30 | Santhi Ashram | 5,000.00 |
| 31 | Bethany Convent, Kanya Kumari | 2,000.00 |
| 32 | Asser Illam, Aralkumarapuram | 2,000.00 |
| | **Total** | **2,13,000.00** |

## 14. Grand Total

| | | |
|---|---|---|
| **1** | **Convents & Religious** | **213,000.00** |
| **2** | **Individuals** | **100,000.00** |
| **3** | **Schools & Colleges** | **514,513.00** |
| **4** | **Institutions** | **205,000.00** |
| **5** | **Pious Associations** | **39,000.00** |
| **6** | **Kaliakkavilai District** | **51,000.00** |
| **7** | **Kollamcode District** | **50,500.00** |
| **8** | **Kulasekharam District** | **36,000.00** |
| **9** | **Panachamoodu District** | **32,500.00** |
| **10** | **Marthandam District** | **98,500.00** |
| **11** | **Azhakiyamandapam District** | **41,000.00** |
| **12** | **Nagercoil District** | **30,000.00** |
| **13** | **Missions** | **9,000.00** |
| | **Total** | **1,420,013.00** |

## ஆண்டுதிரட்டு சமர்ப்பித்து பங்குப்பேரவை அனுமதி பெற்ற ஆலயங்களின் விபரம் 2025-26

### 1. Kaliakkavilai District

| No. | Parishes | Account Submitted | Committee |
|---|---|---|---|
| 1. | Mariagiri | **Submitted** | **Approved** |
| 2. | Nadaikkavu | **Submitted** | **Approved** |
| 3. | Koickathoppu | **Submitted** | **Approved** |
| 4. | Meenachal | **Submitted** | **Approved** |
| 5. | Mecode | | |
| 6. | Mankad | **Submitted** | **Approved** |
| 7. | Adichavilakom | **Submitted** | **Approved** |
| 8. | Sooriacode | **Submitted** | **Approved** |
| 9. | Chekkittuvilai | **Submitted** | **Approved** |

### 2. Kollenkode District

| No. | Parishes | Account Submitted | Committee |
|---|---|---|---|
| 1. | Ambilikonam | | |
| 2. | Pallukuzhy | **Submitted** | |
| 3. | Pushpagiri | **Submitted** | **Approved** |
| 4. | Fathimanagar | **Submitted** | **Approved** |
| 5. | Pinkulam | **Submitted** | **Approved** |
| 6. | Oorambuvilai | **Submitted** | **Approved** |
| 7. | Kidarakkuzhy | **Submitted** | **Approved** |
| 8. | Palavilai | **Submitted** | |
| 9. | Kaduvakkuzh | **Submitted** | |
| 10. | Adaikkakuzhy | **Submitted** | |
| 11. | Kirathoor | **Submitted** | **Approved** |
| 12. | Manjathopu | **Submitted** | **Approved** |
| 13 | Punnamoottukadai | **Submitted** | **Approved** |



### 3. Kulasekharam District

| No. | Parishes | Account Submitted | Committee |
|---|---|---|---|
| 1. | Ganapathikal | **Submitted** | **Approved** |
| 2. | Kulasekharam | **Submitted** | **Approved** |
| 3. | Pechipparai | **Submitted** | |
| 4. | Mukkampala | **Submitted** | |
| 5. | Anakkarai | **Submitted** | **Approved** |
| 6. | Muthalar | **Submitted** | **Approved** |
| 7. | Mathar | **Submitted** | **Approved** |
| 8 | Cherupalloor | **Submitted** | **Approved** |
| 9. | Peruvazhikkadavu | **Submitted** | **Approved** |
| 10. | Zero Point | **Submitted** | **Approved** |
| 11. | Sivalokam | **Submitted** | **Approved** |
| 12 | Anbunagar | | |
| 13 | Verkilampi | **Submitted** | **Approved** |
| 14 | Charoor | **Submitted** | **Approved** |

### 4. Panachamoodu District

| No. | Parishes | Account Submitted | Committee |
|---|---|---|---|
| 1. | Panachamood | | **Approved** |
| 2. | Vettikuzhi | | |
| 3. | Puliyoorsala | **Submitted** | **Approved** |
| 4. | Keezmancode | **Submitted** | **Approved** |
| 5. | Kanchiyode | **Submitted** | **Approved** |
| 6. | Kulapparai | **Submitted** | **Approved** |
| 7. | Vellachipparai | **Submitted** | |
| 8. | Karumanoor | | |
| 9. | George Nagar (Mugavoor) | **Submitted** | **Approved** |
| 10 | Chempakathari | | |
| 11 | Arumanai | **Submitted** | **Approved** |

### 5. Marthandam District

| No. | Parishes | Account Submitted | Committee |
|---|---|---|---|
| 1. | Attoor | **Submitted** | **Approved** |
| 2. | Mathoorkona | **Submitted** | **Approved** |
| 3. | Kuzhithurai | **Submitted** | **Approved** |
| 4. | Marthandam | **Submitted** | **Approved** |
| 5. | Kannacode | **Submitted** | **Approved** |
| 6. | Unnamalakad | **Submitted** | **Approved** |
| 7. | Chitharal | **Submitted** | **Approved** |
| 8. | Soosaipuram | **Submitted** | **Approved** |
| 9. | Vimalapuram | **Submitted** | **Approved** |
| 10. | Serottukonam | **Submitted** | **Approved** |
| 11. | Konam | **Submitted** | **Approved** |
| 12 | Valiyavilai | **Submitted** | **Approved** |
| 13 | Elavuvilai | **Submitted** | |

### 6. Azhakiyamandapam District

| No. | Parishes | Account Submitted | Committee |
|---|---|---|---|
| 1. | Vazhodu | **Submitted** | |
| 2. | Seynamvilai | | |
| 3. | Pilankala | **Submitted** | |
| 4. | Poonthoppu | **Submitted** | **Approved** |
| 5. | Alwarcoil | **Submitted** | |
| 6. | Chellamkonam | **Submitted** | **Approved** |
| 7. | Kattuvilai | **Submitted** | **Approved** |
| 8. | Punkarai | **Submitted** | |
| 9 | Aloor | **Submitted** | **Approved** |



### 7. Nagercoil District

| No. | Parishes | Account Submitted | Committee |
|---|---|---|---|
| 1. | Christuvilagam (Nagercoil) | **Submitted** | |
| 2. | Chettikulam | | |
| 3. | Sankaralingamparai | | |
| 4. | Aanapothai | **Submitted** | **Approved** |
| 5. | Kallikulam (Nice Nagar) | **Submitted** | |
| 6. | Mathias Nagar | **Submitted** | |
| 7. | Ganadasapuram | **Submitted** | **Approved** |
| 8. | Navalkadu | **Submitted** | **Approved** |
| 9. | Erachakulam | **Submitted** | **Approved** |
| 10. | Parvathipuram | **Submitted** | **Approved** |
| 11. | Thenikulam | **Submitted** | **Approved** |
| 12. | Kanyakumari | **Submitted** | **Approved** |
| 13 | James Town | **Submitted** | |
| 14. | Mantaramputur | **Submitted** | **Approved** |
| 15. | Bhoothapandy | **Submitted** | **Approved** |
| 16. | Mukkadal | **Submitted** | |
| 17. | Kumarapuram | **Submitted** | **Approved** |

# மேரி மக்கள் துறவற சபை

**இறையடி சேர்ந்தார்**




**அருட்சகோதரி மேரி மரினா டி. எம்** (82) பாலா மறைமாவட்டம் இளந்தோட்டம் பங்கில் சூரனோலிக்கல் வீட்டில் காலம் சென்ற திரு. ஜாண், திருமதி. அன்னம்மாள் தம்பதியினரின் மகளும் மேரி மக்கள் துறவற சபை உறுப்பினரும் ஆகிய அருள் சகோதரி மேரி மரீனா அவர்கள் 09.07.2026 அன்று இறைவனிடம் சேர்ந்தார்கள்.

இவரின் கல்லறை அடக்கம் 09.07.2026 வியாழக்கிழமை மதியம் 2.30 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார்த்தாண்டம் மேரி மக்கள் மாகாண இல்ல கல்லறை தோட்டத்தில் நடைபெற்றது.

இவர் குடப்பனகுந்நு, பொங்குமூடு, நெல்லுமூடு, பனச்சமூடு, தடிக்காரக் கோணம், மார்த்தாண்டம், போன்ற துறவற இல்லங்களின் தலைமை அருட்சகோதரியாகவும், மறைபரப்பாளராகவும், மார்த்தாண்டம் கிறிஸ்துராஜா அச்சகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பவராகவும், உயர் மாகாணம் மற்றும் மாகாணத்தின் ஆலோசகராகவும், செயலாளராகவும், இருந்து செயல்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அருள்சகோதரி அவர்களின் ஆன்மா இளைப்பாறுதலுக்காக ஜெபிப்போம்.



**துறவற பயிற்சியின் முதல் ஆண்டு துவக்கம்**

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் பயிற்சி காலகட்டத்தின் முதல் நிலையில் 7 சகோதரிகள் இணைந்து கொண்டார்கள். 14.07.2026 காலையில் மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை மோண்சிஞ்ஞோர் ஜோஸ் பிரைட் அவர்கள் தலைமையில் திருப்பலி நிறைவேற்றி மாகாண தலைவி மதர் ரோஸ் பிரான்சிஸ் அவர்கள் முன்னிலையில் முதல் பயிற்சி காலகட்டத்தை துவங்கினார்கள். சகோதரிகள் 7 பேருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்!

**புதிய துறவற இல்லம் நிறுவுதல்**

புனித சூசையப்பர் மாகாணத்திற்குட்பட்ட ஆப்பிரிக்கா நாட்டில் ஸ்டன்சானியா மாநிலத்தில் நிக்கோல என்னுமிடத்தில் மறைபரப்பு தளத்தோடு இணைந்து ஒரு துறவற இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த துறவற இல்லத்தை அருட்தந்தை ஜோபி தறையில் MCBS அவர்கள் ஆசீர்வதிதார்கள்.

**நாம விழா கொண்டாட்டம்**

மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் நாம விழாவானது 16.07.2026 அன்று மேரி மக்கள் துறவற சபை சார்பாக மார்த்தாண்டம் மாகாணச் சிற்றாலயத்தில் வைத்து திருப்பலியும் அதனை தொடர்ந்து வாழ்த்துக் கூட்டமும் நடைபெற்றது. ஏராளமான அருட்சகோதரிகள் கலந்துகொண்டு வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.


# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை மரிய ஜாண்
ஆகஸ்ட் 04



அருட்தந்தை மரிய போப்பில் ஏரவின்
ஆகஸ்ட் 20



அருட்தந்தை பெர்னார்ட்
ஆகஸ்ட் 20



அருட்தந்தை ஜாண் ஷிபு
ஆகஸ்ட் 29

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2026 ஆகஸ்ட்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **21, 22** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**உதவித்திட்டங்கள்**

1. 17.07.2026 அன்று களியக்காவிளை மண்டலத்தின் சுய உதவி குழுக்களில் உள்ள 60 உறுப்பினர;களுக்கு நபருக்கு 10 கோழிகள் வீதம் 600 வான்கோழி குஞ்சுகள் வழங்கப்பட்டன.

2. 18.07.2026 அன்று மதுரை மணடலத்தில் செயல்பட்டு வரும் 2 சுய உதவிகுழுக்களில் உள்ள 30 நபர்களுக்கு பல்வேறு சுய தொழில்கள் செய்ய ரூபாய் 4,50,000/- கடனுதவி வழங்கப்பட்டது.

3. 22.07.2026 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணிமண்டலத்தின் 5 சுய உதவி குழுக்களில் உள்ள 31 உறுப்பினர்களுக்கு ரூபாய் 15,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

**பிறநிகழ்வுகள்**

1. 26.06.2026 அன்று தன்னார்வலர் தினத்தை முன்னிட்டு குலசேகரத்தில் செயல்பட்டு வரும் சாரதா கிருஷ்ணா ஹோமியோபதி மருத்துவ கல்லூரியில் வழங்கப்படும் சிகிச்சை முறைகளை அறிந்து கொள்வதற்காக மிட்ஸ் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. அதன்படி, மிட்ஸ் எழுவோம் இயக்கத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வலர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் ஒருங்கிணைந்து மருத்துவ கல்லூரியை பார்வையிட்டனர். அங்குள்ள மருத்துவ குழுவினர் ஹோமியோபதி மருத்துவ முறை வழியாக வழங்கப்படும் சிகிச்சை முறைகள், மருத்துவ வசதிகள் குறித்து அனைவருக்கும் விவரித்தனர். காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இந்த நிகழ்வில் மொத்தம் 60 நபர்கள் கலந்து கொண்டனர்.

2. 04.07.2026 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 13 பயனாளிகளுக்கு மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்களால் தளிர்கள் உலகம் திட்டத்தின் வழிமுறைகள் மற்றும் மிட்ஸின் செயல்பாடுகள் குறித்து வழிகாட்டுதல் பயிற்சி அளிக்கப்பட்டது.

3. 06.07.2026 அன்று கோல்பிங் செயற்குழு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில்

கோல்பிங் பொதுக்குழு கூட்டம் நடத்துவது குறித்தும், அந்த கூட்டத்தில் முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள் மற்றும் கடன் நிலுவைகளை வசூலிப்பது குறித்தும் விவாதித்து முடிவெடுக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் கோல்பிங் செயற்குழு கூட்டத்தின் உறுப்பினர;கள் அனைவரும் கலந்து கொண்டனர;.

4. 09.07.2026 அன்று மிட்ஸ் மற்றும் சுரேஷ் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் மருத்துவ முகாம் மாத்தூர்கோணம் ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. மாத்தூர்கோணம் ஆலய பங்குத்தந்தை ஜீவன் ஜார்ஜ் அவர்கள் முகாமினை துவங்கி வைத்தார்கள். காலை 10 மணி மதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில் மொத்தம் 68 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

5. 10.07.2026 அன்று நடைக்காவு ஆலய சமூக நல கூடத்தில் வைத்து வான்கோழி வளர்ப்பு பயிற்சி வழங்கப்பட்டது. மெதுகும்மல் பஞ்சாயத்து கால்நடை மருத்துவர் திருமதி நிவேதிதா அவர்கள் வான்கோழி வளர்ப்பு முறைகள், மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி அளித்தார்கள். தொடர்ந்து வான்கோழி வளர;ப்பு தொழிலை செய்து வரும் பயனாளி திருமதி மஞ்சு அவர்கள் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்கள். இந்த பயிற்சியில் 56 சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

6. 11.07.2026 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கான சிறப்பு வகுப்புகள் நடைபெற்றன. திரு. அலோசியஸ் அவர்கள் இந்த திட்டத்தின் முன்னோக்கிய செயல்பாடுகள் குறித்து தாய்மார்களுக்கு பயிற்சி அளித்தார்கள். அருட்சகோதரர் மனோஜ் அவர்கள் மாணவர்களுக்கு Self Evaluation குறித்து வகுப்பெடுத்தார்கள். இந்த வகுப்புகளில் 53 மாணவர்களும் 35 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.

7. 15.07.2026 முதல் 19.07.2026 வரை குடும்ப வளர்ச்சி திட்டத்தின் தேசிய அலுவலக குழுவினரால் குடும்ப வளர்ச்சி திட்டம் வழியாக பயனாளிகள் அடைந்த முன்னேற்றங்களை வெற்றிகதைகளாக படம்பிடிக்கப்பட்டது. மேலும் மதுரை மண்டலத்தில் புதிதாக வழங்கப்பட்டுள்ள கழிவறை கட்டும் திட்டம், குடும்ப வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் தற்போதைய நிலைகளும் படமாக்கப்பட்டது.





### ✶ திருச்சிலுவை பேரணி

வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் 73-ஆம் ஆண்டு நினைவு பாதயாத்திரைக்கான முன்னோட்டமாக பாதயாத்திரைக்கு எடுத்து செல்லப்படும் திருச்சிலுவையானது அனைத்து ஆலயத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் திருச்சிலுவை பேரணியானது ஜூலை 5 அன்று நாகர்கோவில் மற்றும் களியக்காவிளை மறைவட்டங்களிலும், ஜூலை 12 அன்று மார்த்தாண்டம், கொல்லங்கோடு, பனச்சமூடு ஆகிய மறைவட்டங்களிலும் சிறப்பாக நடைபெற்றது.

### ✶ மார் இவானியோஸ் ஆண்டகையின் 73-ஆம் ஆண்டு நினைவு பாதயாத்திரை

ஜூலை 13 மற்றும் 14 தேதிகளில் வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு பாதயாத்திரை நடைபெற்றது. ஜூலை 13 அன்று மார்த்தாண்டம் பேராலயத்தில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் தலைமையில் காலை ஜெபம் மற்றும் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து, இளையோர் இயக்கத் தலைவர் தினேஷ் அவர்கள் சிலுவையைப் பெற்றுக் கொண்டார். காலை 9:00 மணியளவில் பாதயாத்திரை துவங்கி, மாலை 7.30 மணியளவில் பாலராமபுரம் ஆலயத்தை அடைந்தது. ஜூலை 14 அன்று காலை 7 மணிக்கு திருப்பலியுடன் தொடங்கிய பாதயாத்திரை, மாலை 4:15 மணியளவில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் பங்கேற்போடு பட்டம் பேராலயத்தை அடைந்தது. அங்கு அன்போடு வரவேற்று மேதகு ஆயர் மாத்யூஸ் மார் பக்கோமியோஸ் அவர்கள் சிலுவையைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து தூப மன்றாட்டோடு பாதயாத்திரை நிறைவடைந்தது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மெழுகுவர்த்தி பவனியிலும் அனைவரும் கலந்து கொண்டனர்.

# MCA
## Diocese of Marthandam

### 1. வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு திருநாள்

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும், முதல் ஆயருமான வணக்கத்திற்குரிய பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் 73-ம் நினைவுத் திருநாள் 2026 ஜூலை 15-ம் நாள் கொண்டாடப்பட்டது. இதற்கு முன்னோடியாக மார்த்தாண்டம் மறைமாவட்ட இளைஞர் இயக்கம் தலைமையில் 13.07,2026 அன்று காலையில் ஆரம்பமான பாதயாத்திரையை மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை பேராலயத்தில் வைத்து திருப்பலியும் தொடர்ந்து பாதயாத்திரையை துவங்கி வைத்தார்கள். இந்த பாதயாத்திரையில் MCA பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### 2. சபையளவிலான மேலாண்மை குழு கூட்டம்

சபையளவிலான மேலாண்மை குழு கூட்டம் 15.07.2026 அன்று பிற்பகல் 1.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவு நாள் நிகழ்வுகள் முடிந்தபிறகு காதோலிக்கேட் சென்டரில் வைத்து நடைபெற்றது. நமது மறைமாவட்டத்திலிருந்து சபையளவிலான மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் ஐந்து பேரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் ஆயுட்கால உறுப்பினர் சேர்க்கை, J.J. நகர் மிஷன் ஆலய கட்டுமான பணி, வீடு கட்டும் பணி மற்றும் மறு ஒன்றிப்பு தினவிழாவில் கலந்துகொள்ளுதல் தொடர்பான நமது மறைமாவட்ட முன்னேற்ற பணிகள் தொடர்பாக பேசப்பட்டு, தொடர்ந்து நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.



# மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி
## மார்த்தாண்டம் மறைமாவட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழுவின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டமானது 19.07.2026 பிற்பகல் 2.30 மணிக்கு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை ஷிஜூ ஜோஸ் அவர்கள் தலைமையில், இணை இயக்குநர் அருட்தந்தை சில்ஜின் மற்றும் மறைவட்ட இயக்குநர், தந்தையர்கள், அருட்தந்தை றாபின்சன், அருட்தந்தை ஜோஸ், அருட்தந்தை பிபின் முன்னிலையில் 12 செயற்குழு உறுப்பினர்களுடன் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொதுக்குழு கூட்டமானது 58 தலைமை ஆசிரியர்களுடன் மிக சிறப்பாக நடைபெற்றது. கடந்த ஓராண்டு மறைக்கல்வி பணியின் நிகழ்வுகளை அறிக்கையாக செயலர் திரு. மரிய நோபர்ட் அவர்கள் சமர்ப்பித்தார்கள். மேலும் இக்கல்வி ஆண்டின் நிகழ்வுகளைக் குறித்தும், மறைக்கல்வி தினம், மறைமாவட்ட அளவிலான எழுத்துப் போட்டிகள் குறித்த ஆலோசனைகளோடும், இயக்குநர் தந்தையின் அறிவுரைகளோடும், இறுதி ஆசீரோடும் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

# புனித வின்சென்ட் தே பவுல் சபை

வின்சென்ட் தே பவுல் சபை மார்த்தாண்டம் மத்திய பேரவையின் ஜூலை மாத செயற்குழு கூட்டமானது 26.07.2026 ஞாயிறு மாலை 3 மணிக்கு மந்தாரம்புதூர் மெர்சி ஹோமில் வைத்து நடத்தப்பட்டது. மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை பிபின், நாகர்கோவில் மறைவட்ட முதன்மை குருவும் வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகருமான அருட்தந்தை ஜான் குமார், மெர்சி ஹோம் இயக்குனர் அருட்தந்தை ராபர்ட், அருட்தந்தை ரதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மத்திய பேரவை தலைமை பணியாளர் சகோதரர் இயேசு ராஜன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக நற்செய்தி பணியாளர் திரு. கிரிஸ்டல் ஆண்டனி அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் மத்திய பேரவையினுடைய பொறுப்பாளர்கள், வட்டார சபையின் பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மெர்சி ஹோமிற்கு வின்சென்ட் தே பவுல் சபை சார்பில் என்னென்ன உதவிகள் செய்ய முடியும் என்பது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. முதற்கட்டமாக இன்வெர்ட்டர் வாங்கிக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் தொடர் உதவிக்கு நிதி சேகரிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மேலும் மத்திய பேரவையின் ஆண்டு விழா 27.09.2026 அன்று நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. நாகர்கோவில் வட்டார சபை சார்பில் மெர்சி ஹோமிற்கு அரிசி, காய்கறி மற்றும் உடைகள் வழங்கப்பட்டது. மெர்சி ஹோம் குறித்து எல்லா ஆலயங்களிலும் அறிவிக்க வேண்டும் என்றும் பிறந்த நாள், திருமண நாள், நினைவு நாள் விழாக்கள் இவ் இல்லத்தில் வைத்து நடத்தி உதவிகள் வழங்க பங்கு மக்களை ஊக்குவிக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் பல்வேறு நிகழ்வுகளை குறித்து ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தின் முடிவில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.



மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

✦ **ஞாயிறு பயணம் :** மரியாயின் சேனை மார்த்தாண்டம் சகாய மாதா கியூரியா சார்பில் ஞாயிறு பயணம் வழியாக வீடுகளை சந்தித்து ஜெபிக்கின்ற சேவையானது, குழித்துறை சகாய மாதா ஆலயத்தில் கடந்த 28/06/226 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் 34 சேனையாளர்கள் கலந்து கொண்டு 32 இல்லங்களை சந்தித்து ஜெபித்தனர். இதற்கான ஏற்பாடுகளை செய்த கியூரியா ஆன்ம இயக்குநர் Msgr. ஜோஸ்பிறைட் அவர்களுக்கும், கியூரியா நிர்வாகிகளுக்கும் நன்றிகள்.

# HEALTH FOR ONE MILLION (HOM)

## Diocese of Marthandam

❖ 26.7.2026 அன்று தச்சன்விளாகம் சுய உதவிக் குழுவில் வைத்து physiotherapy குறித்து விழிப்புணர்வு கூட்டம் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மருத்துவர் திருமதி ஸ்வீட்லி அவர்கள் விழிப்புணர்வு உரையாற்றி பயிற்சி அளித்தார்கள். 50 பேர் கலந்து கொண்டனர்.

❖ 20.7.2026 அன்று மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து பேதுருவின் கரங்கள் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டது.

# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

## Mar Ephraem IAS Acadamy

மார் எஃப்ரேம் IAS Acadamy, சென்னை அறம் IAS Acadamy -யுடன் இணைந்து, மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரியில் வைத்து 03.07.2026 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இறைவணக்க பாடல் தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்துடன் துவக்க விழா ஆரம்பமானது. கல்லூரி முதல்வர் Dr. Lenin Fred அவர்கள் வரவேற்புரை ஆற்ற, கல்லூரி தலைவர் Most Rev. Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். தொடர்ந்து கல்வித்துறை டீன் Dr. N. Austin முதன்மை விருந்தினரை அறிமுகப்படுத்த, முதன்மை விருந்தினர் Dr. R. Stalin IPS, (Superintendent of Police, K.K.Dist.) உரையில் இந்த IAS Acadamy -யை எவ்வாறு பயன்படுத்தி வாழ்வின் உயர்நிலைக்கு போகலாம் என்பதை விளக்கினார். தொடர்ந்து Mar Ephraem IAS Acadamy Logo -வை வெளியிட்டார், அவைத்தலைவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டனர்.

அதன்பின் அறம் IAS Acadamy இயக்குநர் Mr. M. செந்தில் குமார் மற்றும் Mr. T. சிந்தனை செல்வன் IFOS, Officer Trainee, அறம், மாணவர்களோடு உரையாடினார்கள். பின்னர் கல்லூரி தலைவர் Most Rev. Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் விருந்தினர்களை கௌரவித்தார்கள். நிகழ்ச்சியின் நிறைவாக ஒருங்கிணைப்பாளர். Dr. A. Biju, பேராசிரியர் CSE, அவர்கள் நன்றியுரை வழங்கினார். இவ்விழா தேசிய கீதத்துடன் சிறப்பாக நிறைவடைந்தது.



# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மாரியகிரி

## பேராசியர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம்

பேராசியர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாமானது 08.06.2026 அன்று அருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. கருத்துரையாளராக பாளையங்கோட்டை புனித ஜாண் கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை ரூபஸ் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களை கையாளும் முறை, பயிற்சி அளிக்கும் முறை பற்றி விளக்கமளித்தார்.

## கல்லூரியின் 29–வது ஆண்டைய துவக்கம்

17.06.2026 அன்று கல்லூரியின் 29-வது ஆண்டின் மாணவர்களின் ஆரம்ப வகுப்பானது நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அருட்தந்தை ஜெஸ்டின் அவர்கள் சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார்கள். கல்லூரியின் முதல்வர் முனைவர் சுபாஷ் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். கல்லூரியின் தாளாளர், முதல்வர், மேற்பார்வையாளர், துறைத்தலைவர்கள் மற்றும் பொறுப்பாசிரியார் களால் முதலாமாண்டு மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

## மாணவர்களுக்கான சிறப்பு வகுப்புகள்

முதலாமாண்டு கல்லூரியில் இணைந்த மாணவர்களுக்கான சிறப்பு பயிற்சியானது 19.06.2026 மற்றும் 20.06.2026 ஆகிய இரு நாட்களில் நடத்தப்பட்டது. யோகா, ஆங்கில பயிற்சி, கணிணி பயிற்சி மற்றும் ஆளுமை திறன் வளர்த்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

## ஆயரின் நாம விழா

மறைமாவட்ட ஆயரின் நாமவிழாவை முன்னிட்டு 29.06.2026 அன்று நடத்தப்பட்ட நிகழ்வில் தாளாளர், நிதி காப்பாளர் மற்றும் துறைத்தலைவர்கள் ஆயரை சந்தித்து ஆசி பெற்றனர்.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

❖ மார்த்தாண்டம் மறைவட்ட குருக்கள் தியானமானது மார் எப்ரேம் இளங்குருமடத்தில் வைத்து ஜூலை 7 -ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. மறைவட்டத்தில் புதிதாக இணைந்த அருட்தந்தை ரெஜின் அவர்கள் சிறப்பாக வரவேற்கப்பட்டார்.

❖ மார்த்தாண்டம் மறைவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகையானது ஜூலை 19-ஆம் தேதி கிறிஸ்து அரசர் பேராலயத்தில் வைத்து பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அவர்கள் தலைமையில் மறைவட்ட குருக்கள் கன்னியர்கள் மற்றும் பொதுநிலையினர் பங்கேற்க சிறப்பாக நடைபெற்றது.

❖ மார்த்தாண்டம் மறைவட்ட இளையோர் இயக்கம் சார்பில் மார் இவானியோஸ் ஆண்டகையின் சிலுவைப்பயணம் சிறப்பாக நடைபெற்றது

## குலசேகரம் மறைவட்டம்

❖ குலசேகரம் மறைவட்டத்தின் குருக்கள் கூடுகையானது 07.07.2026 அன்று மாத்தார் பங்கில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் ஜூபிலி ஆண்டிற்கான முன்னேற்பாடுகள், மேய்ப்புப்பணி, நிர்வாகம் மற்றும் சமூக நலன் தொடர்பான பல்வேறு முக்கிய நிகழ்வுகள் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

❖ ஜூபிலி ஆண்டை முன்னிட்டு ஒவ்வொரு பங்கிலும் ஆன்மீக வளர்ச்சி மற்றும் குடும்ப ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டது. மேலும், ஒவ்வொரு பங்கிலும் குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கை, ஆலய வளர்ச்சி, திருச்சபையிலிருந்து விலகி வாழும் குடும்பங்கள் ஆகியவற்றை அடையாளம் காணும் வகையில் மறைவட்ட அளவிலான



கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக அருட்தந்தையர் பீட்டர், பிபின், சில்ஜின் மற்றும் அபிஷேக் ராஜ் ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

❖ மார் இவானியோஸ் பாதயாத்திரையை முன்னிட்டு ஜூலை 14 அன்று பட்டம் பேராலயத்தில் நடைபெறும் மாலை ஜெபம் மற்றும் மெழுகுவர்த்தி ஊர்வலத்தில் இறைமக்கள் அனைவரும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. போக்குவரத்து வசதிகளும் ஏற்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

❖ கூட்டத்தில் மறைவட்ட குருக்களின் செயலாளராக அருட்தந்தை அபிஷேக் ராஜ் மற்றும் தொழிலாளர் ஆணையப் பொறுப்பாளராக அருட்தந்தை பீட்டர் ஆகியோர் அறிவிக்கப்பட்டனர்.

❖ செப்டம்பர் 1–8 வரை நடைபெறும் அடைக்கல அன்னை திருத்தலப் பெருவிழாவிற்கு மறைவட்டத்தின் முக்கியப் பங்குகள் வழிபாட்டு நிகழ்வுகள் மற்றும் பிற தேவைகளில் முழுமையான ஒத்துழைப்பை வழங்க ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டம், ஜூபிலி ஆண்டை முன்னிட்டு மறைவட்டத்தின் மேய்ப்புப்பணியை வலுப்படுத்தி, இறைமக்களின் ஆன்மீக மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக ஒருங்கிணைந்த செயல்பாடுகளை முன்னெடுக்க உறுதியளிக்கும் பயனுள்ள தீர்மானங்களுடன் நிறைவுற்றது.

## களியக்காவிளை மறைவட்டம்

❖ களியக்காவிளை மறைவட்டம் சார்பாக மார் இவனியோஸ் ஆண்டகையின் நினைவையொட்டி 12.07.2016 அன்று MCYM இளைஞர்களால் இலவச இரத்ததான முகாமானது நடத்தப்பட்டது. சுமார் 60-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். 20-க்கும் அதிகமான இளைஞர்கள் முதல் முறையாக இரத்ததானம் செய்து தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இந்த முகாமானது இரத்த தானத்தை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது என்று அனைத்து இளைஞர்களும் கருத்து தெரிவித்திருந்தனர்.

# பனச்சமூடு மறைவட்டம்

❖ ஜூலை மாத குருக்கள் கூடுகையானது 03.07.2006 அன்று காலை 11.00 மணிக்கு பனச்சமூடு பங்குத்தந்தை இல்லத்தில் வைத்து மறைவட்ட முதன்மை குரு கோர் எப்பிஸ்கோப்பா S.வற்கீஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் புதிதாக மறைவட்டத்தில் பணி இடமாற்றம் பெற்று வந்த குருக்களுக்கு வரவேற்பும் அதனைத் தொடர்ந்து மறைவட்ட பணி பொறுப்புகளும் வழங்கப்பட்டன.

❖ 05.07.2026 அன்று பனச்சமூடு மறைவட்ட MCYM கூடுகை பனச்சமூடு பங்கில் வைத்து மறைவட்ட MCYM இயக்குநர் அருட்தந்தை வில்பிறைட் தலைமையில் நடைபெற்றது. இதில் கோர் எப்பிஸ்கோப்பா S. வற்கீஸ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

❖ பனச்சமூடு மறைவட்ட MCYM இளையோர்கள் ஆயர் மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவின் ஆயத்தமாக 12.07.2026 அன்று திருச்சிலுவை பேரணி நடத்தினார்கள். இப்பேரணி பனச்சமூடு பங்கிலிருந்து ஆரம்பமாகி தச்சூர்கோணம் பங்கில் நிறைவடைந்தது. இளையோர்கள் இப்பேரணியை அருட்தந்தை வில்பிறைட் தலைமையில் சிறப்பாக நிகழ்த்தினார்கள்.

❖ 25.07.2026 அன்று மாலை 6.00 மணிக்கு முகவூர் பங்கின் எல்லைக்குட்பட்ட பகுதியான, முழுக்கோடு சாலையோரத்தில் புனித ஆரோக்கிய அன்னையின் பெயரில், அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத் அவர்களின் வழிகாட்டுதலில் புதிதாக குருசடியானது நிறுவப்பட்டது. நமது மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் சிறப்பாக இதை ஆசீர்வதித்து வழங்கினார்.

# நாகர்கோவில் மறைவட்டம்

❖ ஜூலை மாதம் 6 ஆம் தேதி அன்று கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து நாகர்கோவில் மறைவட்ட அருள்தந்தையர்களின் சிறப்பு கூட்டம் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜாண் குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மறைவட்ட



குருக்கள் அனைவரும் பங்கேற்றனர். இக்கூடுகையில் மறைவட்டத்தின் வளர்ச்சி மற்றும் பல்வேறு பணிக்குழுக்களின் செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல்களும், விவாதங்களும் நடைபெற்றன. குறிப்பாக மறைக்கல்வி மற்றும் மலங்கரை கத்தோலிக்க இயக்கம் போன்ற பணிக்குழுக்களின் செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டு அவற்றைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இறுதியாக பணிக்குழுக்களின் புதிய இயக்குனர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தொடர்ந்து மறைவட்ட குருக்களின் செயலராக அருள்தந்தை ரதீஷ் ஜோசப் அவர்கள் தேர்வுசெய்யப்பட்டார்கள். அருள் சகோதரி பிளாசிடா தாய்மார் சங்கத்தின் இயக்குனராக தொடர்ந்து செயல்படுவார் என தெரிவிக்கப்பட்டது.

**மறைவட்ட இயங்குனர்கள் மற்றும் பணிக்குழுக்களின் விவரம்**

| | |
|---|---|
| பேரருள். ஜாண் குமார் | - திருத்தூயாகப்பணியாளர்கள் சங்கம் & இறையழைத்தல் ஊக்குவிப்பாளர் |
| Fr. ஜஸ்டின் | - வின்சென்ட் டி பால் & மரியாயின் சேனை (பக்த இயக்கங்களின் ஆன்மீக ஆலோசகர்) |
| Fr. ராபர்ட் | - கிறிஸ்தவ ஒன்றிப்பு மற்றும் பல்சமய உரையாடல் & அருள்வாழ்வியம் |
| Fr. சஜித் பிரான்சிஸ் | - இளையோர் இயக்கம் (MCYM) & இளம் தம்பதியார் சங்கம் (AYC) |
| Fr. ரதீஷ் ஜோசப் | - மறைக்கல்வி & ஊடகப்பணி |
| Fr. ரதீஷ் ரிச்சர்ட் | - திருவிவிலியம் & குடும்ப நலப்பணி |
| Fr. சுனிஷ் | - மலங்கரை கத்தோலிக்க இயக்கம் (MCA) & தொழிலாளர் நலப்பணி |
| Fr. ஜெப பெனடிக்ட் | - சிறார் இயக்கம் (MCCL) |

❖ நாகர்கோவில் மறைவட்ட குருக்களின் மாதாந்திர தியானமானது ஜூலை மாதம் 6 -ஆம் தேதி கன்னியாகுமரி மலங்கரை பவனில் வைத்து நடைபெற்றது. திருத்தந்தை லியோவின் 'ஹியூமானிட்டாஸ் டிக்னிடாஸ்' (Humanitas Dignitas) எனும் சமீபத்திய சுற்றுமடல் (encyclical) இதில் மையப்பொருளாக அமைந்திருந்தது. அருட்தந்தை ஜஸ்டின் அவர்கள் இச்சுற்றுமடல் குறித்த அறிமுகத்தை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மற்ற அருள்தந்தையர்களும் தங்கள் கருத்துகளையும் சிந்தனைகளையும் பகிர்ந்துகொண்டனர். இறுதியாக செபத்துடன் இந்நிகழ்வு நிறைவடைந்தது.

❖ சாந்தி ஆசிரம பாதுகாவலரான புனித பெனடிக்டின் தினவிழா ஜூலை 11-ஆம் தேதி கொண்டாடப்பட்டது. மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதன்மை குரு பேரருட்தந்தை ஜோஸ் பிரைட் அவர்கள், மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜாண் குமார், ஆசிரம குரு அருட்தந்தை சேவியர் தாமஸ், முக்கடல் பங்குத்தந்தை அருட்தந்தை ஜஸ்டின் மற்றும் நாகர்கோவில் மறைவட்ட அனைத்து குருக்களும் இணைந்து திருப்பலி ஒப்புகொடுத்து இறைவேண்டல் செய்தார்கள். இத்தினவிழாவில் மார்த்தாண்டம் மேரி மக்கள் துறவறசபை மாகாண தலைவி மதர் ரோஸ் பிரான்சிஸ், பல துறவற சபை குருக்கள் கன்னியர்கள், உதவியாளர்கள் மற்றும் இறைமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து, ஆசிரம தலைவர் (மடாதிபதி) பேரருட்தந்தை கிறிஸ்பின் சார்பாக அருட்தந்தை சேவியர் தாமஸ் அவர்கள் கேக் வெட்டி மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார்கள். இறுதியில் மதிய உணவுடன் விழா இனிதே நிறைவுற்றது.

❖ நாகர்கோவில் மறைவட்டத்திற்கு பணி நியமனம் பெற்று புதிதாக வந்த அருட்தந்தை ஜஸ்டின், அருட்தந்தை ரதீஷ் ஜோசப் மற்றும்



அருட்தந்தை ஜெப பெனடிக்ட் ஆகியோர் மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜாண் குமார் தலைமையில் தங்கள் பங்குகளில் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்கள். இந்த பொறுப்பேற்கும் நிகழ்வுகளில் மறைவட்ட குருக்கள் அனைவரும் கலந்து அவர்களை வாழ்த்தி வரவேற்றனர்.

## அழகியமண்டபம் மறைவட்டம்

❖ ஜூலை மாதம் 24-ஆம் தேதி மாலை 5:30 மணி அளவில் பிலாங்காலை ஆலயத்தில் வைத்து அழகியமண்டபம் மறைவட்ட அருட்தந்தையார்களின் சிறப்பு கூடுகை மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை இயேசுதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டதிற்கு மறைவட்ட குருக்கள் அனைவரும் பங்கேற்றனர். இக்கூடுகையில் மறைவட்டத்தின் வளர்ச்சி மற்றும் பல்வேறு பணிக்குழுக்களின் செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல்களும், விவாதங்களும் நடைபெற்றன. குறிப்பாக பங்குகளின் தனிப்பட்ட வளர்ச்சி குறித்து சிந்திக்கப்பட்டது. அத்தோடு பங்குகளில் உள்ள ஆவணங்களை கணினி மயமாக்குவதை குறித்து கருத்து முன்வைக்கப்பட்டு கலந்துரையாடல் செய்யப்பட்டது. இறுதியாக பணிக்குழுக்களின் புதிய இயக்குனர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

**மறைவட்ட இயங்குனர்கள் மற்றும் பணிக்குழுக்களின் விவரம்**

| | |
|---|---|
| திருத்தூயாகப்பணியாளர்கள் சங்கம், இறையழைத்தல் | |
| ஊக்குவிப்பாளர் & இளம் தம்பதியார் சங்கம் | Fr. இயேசுதாஸ் |
| வின்செென்ட் டி பால் & மரியாயின் சேனை | Fr. மரிய ஜாண் |
| மறைக்கல்வி & மலங்கரை கத்தோிக்க இயக்கம் | Fr. அலெக்ஸ் |
| இளையோர் இயக்கம் & தொழிலாளர் நலப்பணி | Fr. ஜொறோம் காட்வின் |
| மறைவட்ட குருக்களின் செயலர், ஊடகப்பணி & சிறார் இயக்கம் | Fr. றோபின் |

# ஆயரின் ஜூலை மாத நிகழ்வுகள்



1 ➢ நாலாஞ்சிறை புனித மரியன்னை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு வகுப்பெடுத்தார்.

3 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அறம் ஐ.ஏ.ஸ் அகாடமி வகுப்புகளை துவங்கி வைத்தார்.

3 ➢ அம்பிலிகோணம் ஆலயத்தில் திருவிழா திருப்பலியை நிறைவேற்றி புதுநன்மை வழங்கி ஆசீர்வதித்தார்.

4 ➢ Malankarai School of Word and Worship 2026 - 2027 ஆண்டிற்கான துவக்க விழாவிற்கு தலைமை தாங்கி தேர்ச்சி பெற்றவர்களுக்கு பட்டயம் வழங்கி கௌரவித்தார்.

5-6 ➢ தமிழ்நாடு ஆயர் பேரவையில் கலந்து கொண்டார்.

7 ➢ நாலாஞ்சிறை புனித மரியன்னை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு வகுப்பெடுத்தார்.



7 ➢ மார் இவானியோஸ் CBSE பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்ட ரோபாட்டிக்ஸ் ஆய்வகத்தை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

8 ➢ நாலாஞ்சிறை புனித மரியன்னை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு வகுப்பெடுத்தார்.

9 ➢ அணக்கரையில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றி தம்பதிகளை ஆசீர்வதித்தார்.

9 ➢ மேரிமக்கள் கன்னியர் சமூகத்தை சார்ந்த அருட்சகோதரி மரினா அவர்களின் அடக்கத்திருச்சடங்கிற்கு தலைமை தாங்கினார்.

10 ➢ நாலாஞ்சிறை புனித மரியன்னை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு வகுப்பெடுத்தார்.

11 ➢ திருவல்லாவில் திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றி ஆசீர்வதித்தார்கள்.

13 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுத் திருப்பலி நிறைவேற்றி நினைவுத் திருப்பயணத்தை துவங்கி வைத்தார்.

14 ➢ ஷாலோம் இல்லத்தில்' திருப்பலி நிறைவேற்றினார்.

14 ➢ பட்டம் பேராலயத்தில் வைத்து மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற மாலை ஜெபத்திலும் மெழுகுவர்த்தி பவனியிலும் கலந்து கொண்டார்.

15 ➢ வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் நினைவுத்திருநாள் திருப்பலி அர்ப்பித்து ஆசீர்வதிததார்.

16 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் தலைமை இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.

16 ➢ மார் எப்ரேம் கல்லூரியில் புதிதாக சேர்ந்த முதலாமாண்டு மாணவர்களை வரவேற்று ஆசீர்வதித்தார்.

17 ➢ புனித ஜாண் மரிய வியானி குருக்கள் நலநிதியக் கூட்டத்திற்கு தலைமைதாங்கினார்.

18 ➤ நாலாஞ்சிறை புனித மரியன்னை உயர் குருமடத்தில் குருமாணவர்களுக்கு வகுப்பெடுத்தார்.

19 ➤ தேவதானப்பட்டியில் திருப்பலி நிறைவேற்றி புதுமனையை அர்ச்சித்து ஆசீர்வதித்தார்.

19-24 ➤ கேரளா இடுக்கி மறைமாவட்ட குருக்களுக்கு ஆண்டு தியானத்தை தலைமையேற்று நடத்தி ஆசீர்வதித்தார்.

25 ➤ முகவூரில் புதிதாக அமைக்கப்பட்ட குருசடியை திறந்து வைத்து ஆசீர்வதித்தார்.

26 ➤ ஆதிச்சவிளாகம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி பேராலய கட்டுமான நிதி சேகரிப்பிற்கான சந்திப்பையும் மேற்கொண்டார்.


27-31 ➤ கேரளா இடுக்கி மறைமாவட்ட குருக்களுக்கு ஆண்டு தியானத்தை தலைமையேற்று நடத்தி ஆசீர்வதித்தார்.




# இம்மாதம் நினைவு கூர

ஆகஸ்ட் 2026

1 – பதினைந்து நோன்பு ஆரம்பம்
புனித ஸ்மூனியும் ஏழு பிள்ளைகளும் குரு எலியாசரும்
புனித அல்போன்ஸ் லிகோரி
2 – பெந்தக்கோஸ்துக்குப்பின் பத்தாம் ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க மறைக்கல்வி தினம்
4 – குருக்களின் விண்ணகப் பாதுகாவலரான
புனித ஜான் மரிய வியானி
5 – பாறசாலை மறைமாவட்டம் உதயம்
6 – நம் ஆண்டவரின் உருமாற்றம்
8 – புனித டொமினிக்
9 – உருமாற்றத்திற்குப்பின் முதல் ஞாயிறு
திருத்தூதர் மத்தியாஸ்
10 – புனித லாறன்ஸ்
11 – இறைவாக்கினர் மீக்கா, புனித கிளாரா
12 – புனித சூசன்னா
13 – மார் ஹிப்போளிட்டஸ், புனித ஜாண் பெர்க்மான்ஸ்
14 – புனித மாக்ஸிமிலியான் கோள்பே
15 – சூனோயோ திருநாள்
பதினைந்து நோன்பு நிறைவு
மோறான் மோர் பசேலியோஸ் கிளீமீஸ் காதோலிக்கோஸ் ஆண்டகையின் திருநிலைப்பாடு
பெதனி துறவற சமூகம் நிறுவப்பட்ட நாள்
இந்திய சுதந்திர தினம்
16 – உருமாற்றத்திற்குப்பின் இரண்டாம் ஞாயிறு
சமூக நீதி ஞாயிறு
20 – புனித பெர்னார்டு
21 – திருத்தந்தை புனித பத்தாம் பத்திநாதர்
22 – அனனியா, அசரியா, மிசாவேல்
23 – உருமாற்றத்திற்குப்பின் மூன்றாம் ஞாயிறு
அந்தியோக்கியாயில் மார் ஒஸ்தாத்தியோஸ்
25 – புனித தீத்து
26 – ஜேக்கப் மார் பர்ணபாஸ் ஆண்டகையின் நினைவு (2021)
27 – புனித மோனிக்கா
28 – புனித அகுஸ்தினார்
29 – திருமுழுக்கு யோவானின் தலை துண்டிக்கப்பட்டதன் நினைவு
புனித எவுப்றாசியா
30 – உருமாற்றத்திற்குப்பின் நான்காம் ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க தாய்மார் சங்கம் தினம் (MCMF)
அரிமத்தியா ஊர் யோசேப்பும், நிக்கதேமும்

4


6


8


15


## அருட்தந்தை முனைவர் யூஜின் அவர்களுக்கு வாழ்த்துக்கள்



## மறைபரப்பு தளச்செய்திகள்



## குருக்கள் நலநிதியத்தின் கூடுகை



## மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி




## DM Convent



## MIDS




## MCYM



## MCA



## புனித வின்சென்ட் தே பவுல் சபை



## Health for One Million (HOM)



## மறைவட்ட செய்திகள்

